னார்கள். ஆனால் பெரிய விவசாயிகளுக்கு 14 காசு என்று இருந்ததே அது 15 காசாக வசூலிக்கப்படுகிறதே, அது எப்போது உயர்த்தப்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவாரா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே நான் ஏதோ கணக்கு போட்டு சொன்னேன் என்று உறுப்பினர் சொல்கிறார். நான் போட்ட கணக்கு அல்ல, அது உண்மையான கணக்கு. 1960-லே 1 ரூபாய் அது 72-லே 49.5 காசுக்கு சமம் 82-லே 21.7 காசுக்கு சமம். இது நாட்டிலே இருக்கக் கூடிய நடை முறைக் கணக்கு. நான் போட்ட கணக்கல்ல. அந்த கணக்கின் அடிப்படையிலே 72-லே 12 காசு, விவசாயிகள் அந்த மதிப்பின் அடிப்படையிலே 5.4 காசு என்றுதான் கட்டுகிறார்கள். என்று பொருள். ஆனால் அது 16 காசு என உயர்த்தப்பட்டு, அதற்குப் பிறகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப் பேற்ற பிறகு அதைக் குறைத்து அவர்கள் கேட்டதோ 1 காசு குறையுங்கள் என்று தான் சொன்னார்கள், ஆனால் நம்முடைய முதல்வர் அவர்கள் எப்போதும் தாராளமாக இருப்பதை போல அந்த 16 காசை 14 ஆக குறைத்து, சிறு விவசாயிகளுக்கு மேலும் 2 காசை குறைத்து 12 காசாக ஆக்கினார்கள்.

வினா எண். 647—மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சரின் வேண்டுகோளுக் கிணங்க ஒத்திவைக்கப் பெறுகின்றது.

[முற்பகல் 9.10]

பொட்டனேரியிலுள்ள மேச்சேரி செம்மறி ஆட்டு ஆராய்ச்சிப் பண்ணை.

*வினா எண். 648—திரு. செ. செம்மலை: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பொட்டனேரியிலுள்ள உள்ள மேச்சேரி செம்மறி ஆட்டு ஆராய்ச்சிப் பண்ணையை விரிவு படுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைச்சேரி வெள்ளாடுகளைப்பற்றிய சிறு அளவிலான மாதிரிக் கூடம் ஒன்று நிறுவ ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பாசன வசதிகளைப் பெருக்குவதற்காக தற்போதுள்ள கிணற்றை தவிர மேலும் ஒரு குழாய்க் கிணறு தோண்ட, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஆய்வு செய்து முடிக்கப்பட்டுள்ளது. ஒரு சிறிய பழப்பண்ணை அமைக்கப்பட்டு வருகிறது. தீவனப் பொருட்கள் மற்றும் பசுந் தழைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்ய, ஒரு சத்துணவு சோதனைக் கூடம் அமைக்கப்பட்டு வருகிறது.

1982 மார்ச் 25]

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவகர்ளே, இந்த ஆராய்ச்சிப் பண்ணைக்கு மேய்ச்சல் நிலம் கையகப்படுத்தப்பட்டும் அது பயன்படுத்தப்படாமல் இருந்து வருகிறது. எனவே, கிராமப் புறங்களில் ஊரக ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் விவசாயிகளுக்கு ஆடு வாங்கக் கடன் வழங்குகிறபொழுது போதுமான ஆடுகளை அங்கேயிருக்கிற கூட்டுறவுச் சங்கங்களால் வழங்க முடியவில்லை. எனவே, இது போன்ற மேய்ச்சல் நிலங்களைப் பயன்படுத்தும் வகையில் இந்த ஆராய்ச்சிப் பண்ணைகளிலே ஆடு அபிவிருத்தித் திட்டத்தைச் செயல் படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இது ஏற்கனவே செயல் பட்டு வருகிறது.

தஞ்சை மாவட்டத்திலுள்ள விவசாயத்திற்கு தொல்லை தரும் எலிகளை ஒழிக்கும் திட்டம்.

*வினா எண். 649—திரு. இரா. தாமரைக்கனி : திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் விவசாயத்திற்கு தொல்லை தரும் எலிகளை ஒழிக்கும் திட்டத்தை தீவிரப்படுத்தும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) ஒவ்வோர் ஆண்டும் தனித் திட்டத்தின் மூலம் ரூ. 69,000 செலவில் 60,000 ஏக்கரில் எலிகளை ஒழிக்க துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. இத்திட்டத்தில் 60,000 ஏக்கருக்கு ஜிங்க் பாஸ்பைட், அலுமினியம் பாஸ்பைட், போரேட் 10 சதவீதம் குருணை முதலியவை 50 சதவீதம் மானிய விலையிலும், ஒரு எலியைப் பிடித்துக் கொல்ல ஊக்கப் பணமாக 10 பைசா வீதம் (2,00,000 எலிகளை பிடித்துக் கொல்ல) ரொக்கமாகவும் அளிக்கப்படும். மேற்கூறிய எலி கொல்லி மருந்துகள் விவசாய கிடங்குகளின் மூலம் விநியோகிக்கப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, எலியைப் பிடிப்பதற்குள்ள காசு உயர்த்தப்படுமா ? மனிதர்கள் எலியைப் பிடிப்பதையே பாவமாகவும் கருதுகிறார்